சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 165/2017

**PW 1 புஷ்பவள்ளி** **09.08.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான், என் கணவர் ஒரே வீட்டில் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கில் 1 ம் எதிர்மனுதாரர் என் கணவர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் என் மகன் வேலைக்கு இருந்ததாக சொல்லியுள்ள ஆவணம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல அந்த ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இன்சூரன்ஸ் பாலிசியில் ஊதியம் செலுத்தப்பட்ட ஓட்டுநருக்கு காப்பிடாக ரூ.50/- செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மகன் காரை ஓட்டி விபத்து ஏற்படுத்தியுள்ளதால் எனக்கு இழப்பீடு எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு இழப்பீடு கொடுக்கவேண்டும் எனில் என் கணவர் தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்றாலும் நான் சொல்லியுள்ளவாறு காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளவாறு எனக்கு மருத்துவசெலவுகள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் காரை அதன் உரிமையாளர் சரிவர பராமரிக்கவில்லை என என்றும் அதனால் விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால் விபத்து என் மகனின் கவனக்குறைவாலும், காரை சரிவர பராமரிக்காததாலும் ஏற்பட்டதாலும் எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் நான் கேட்டுள்ள நஷ்டஈடு அதிகம் என்றாலும் நான் கேட்டுள்ள வட்டி தொகை

அதிகம் என்றாலும் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி